# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - மனிதனும் சுற்றுச் சூழலும் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) காடுகளை மீட்டெடுத்தல் உலகம் முழுவதும் ஊக்கப்படுத்தப்படுகிறது.

பதில் : **காரணம்;**

1. காடுகள் அழிக்கப்படுவதால் வறட்சி. வெள்ளம். மண்வளம் இழத்தல். காற்று மாசடைதல்.
2. உயிரினங்கள் அழிதல். உலகம் வெப்பமயமாதல் போன்ற பல விளைவுகள் ஏற்படுகின்றன.
3. மரங்கள் வெட்டப்பட்ட அதே இடத்தில் புதிய மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதன் மூலம் காடுகளை அழிவிலிருந்து பாதுகாக்கலாம்.

2) அமில மழை சுற்றுச்சூழலை அழிக்கிறது.

பதில் : **காரணம்:**
அமில மழைக்குக் காரணமான வாயுக்கள் கந்தக - டை - ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு, கார்பன் டை - ஆக்சைடு மற்றும் படிம எரிபொருள் எரிக்கப்படுதல் மூலம் வெளியேறும் கண்ணுக்குத் தெரியாத பொருள்கள் சுற்றுச் சூழலை அழிக்கிறது.

3) நான்காம் நிலைப் பொருளாதார நடவடிக்கைகள் ஓர் அறிவுசார் பொருளாதாரம்.

பதில் : **காரணம்:**
நான்காம் நிலைத் தொழில்களான ஆலோசனை வழங்குதல், கல்வி, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி போன்ற அறிவுசார் செயல்பாடுகளுடன் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகளாக இருப்பதாகும்.

4) மக்கள் தொகை வளர்ச்சி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

பதில் : **காரணம்:**
மக்கள் தொகை வளர்ச்சியினால் இடநெருக்கடி. வேலையில்லாத் திண்டாட்டம், சுகாதாரக்கேடு,சுற்றுச்சூழல் சீர்கேடு. சமூகக் குற்றங்கள் போன்றவைகள் ஏற்படும்.

5) வளம் குன்றா வளர்ச்சியின் இலக்குகள் புவியைப் பாதுகாப்பதாக இருக்கிறதா?

பதில் : **காரணம்:**
வளம் குன்றா வளர்ச்சியின் இலக்குகள் நல்ல ஆரோக்கியமான சுற்றுச்சூழல் சமநிலையையும், பொருளாதார வளர்ச்சியையும் உறுதி செய்வதால் அவை புவியைப் பாதுகாப்பதாக இருக்கிறது.

6) தள்ளு காரணிகள் மற்றும் ஈர்ப்புக் காரணிகள்.

பதில் : மக்களைப் புதிய வாழ்விடத்தை நோக்கி வலிந்து இடம் பெயரச் செய்யும் காரணிகள் தள்ளுக்காரணிகள் எனப்படும். ஈர்ப்பின் காரணமாக புதிய வாழ்விடத்தை நோக்கி மக்கள் இடம் பெயரச் செய்வன ஈர்க்கும் காரணிகள் ஆகும்.

7) முதல்நிலைத் தொழில் மற்றும் இரண்டாம் நிலைத்தொழில்.

பதில் : **முதல்நிலைத் தொழில்கள்:** முதல் நிலைத் தொழில் என்பது மூலப் பொருல்களை பூமியிலிருந்து பயன்பாட்டிற்கு செய்யப்படும் தொழில். இதன் உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், மரம் வெட்டுதல், மீன்பிடித்தல், கால்நடைகளை மேய்த்தல், மரங்களை வெட்டி எடுத்தல் மற்றும் வேளாண்மை செய்தல் ஆகிய தொழில்கள் அடங்கும்.
**இரண்டாம் நிலைத் தொழில்கள்:** இரண்டாம் நிலைத் தொழிலில் மூலப் பொருட்கள் முடிவுற்ற பொருள்களாக மாற்றம் செய்யப்படுகின்றன. (எ.கா) இரும்பு, எஃகு தொழிற் சாலைகள், வாகன உற்பத்தி தொழிற்சாலைகள்.

8) மக்கள்தொகையில் மாற்றம் என்றால் என்ன?

பதில் : மக்கள் தொகையில் மாற்றம் என்பது ஓரிடத்தில் அதிகரிக்கும் அல்லது குறைவதைக் குறிப்பது ஆகும். இது பிறப்பு, இறப்பு மற்றும் மக்கள் இடப்பெயர்வு ஆகியவற்றினால் தீர்மானிக்கப்படுகிறது.

9) சுற்றுச்சூழல் பிரச்சினைகள் யாவை?

**பதில் :** சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

(i) காடுகளை அழித்தல்

(ii) காற்று, நிலம், நீர், ஒலி, ஒளி போன்றவை மாசடைதல்

(iii) நகரமயமாதல்

(iv) நீர்ம விசையில் முறிவு

(v) கழிவு அகற்றுதல்

10) குறையும் காரணிகள் யாவை?

**பதில் :** பஞ்சம், நிலச்சரிவு, புவி அதிர்ச்சி, ஆழிப்பேரலை போர் போன்ற காரணிகளால் மக்கள் தொகை வளர்ச்சி குறையும்.

## <u>3 மதிப்பெண் வினாக்கள்</u>

10 x 3 = 30

11) மக்கள் அடர்த்தி என்றால் என்ன?

**பதில் :** 1. ஒரு சதுர கி.மீ நிலப்பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கையை மக்கள் அடர்த்தி என்கிறோம்.

2. மிகப்பரந்த நிலப்பரப்பில் குறைந்த எண்ணிக்கையில் மக்கள் வசித்தால் அதை குறைந்த மக்களடர்த்தி என்கிறோம்.

3. குறைந்த நிலப்பரப்பில் அதிக எண்ணிக்கையில் மக்கள் வசித்தால் அதை அதிக மக்களடர்த்தி என்கிறோம்.

$$\text{மக்களடர்த்தி} = \frac{\text{மொத்த மக்கள் தொகை}}{\text{மொத்த நிலப்பரப்பு}}$$

12) கொள்ளை நோய் என்றால் என்ன?

**பதில் :** 1. திடீரெனத் தோன்றும் போரினாலும். கொள்ளையர்களின் எதிர்பாராத் தாக்குதலாலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் இறக்க நேரிடும்.

2. இதனைப்போன்று திடீரெனத் தோன்றும் நோய்களாலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறக்க நேரிடும். இவ்வகை நோய்களை கொள்ளை நோய் என்பர்.

3. 14ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் 'பிளேக்" என்ற கொள்ளை நோயினால் 30 முதல் 60 சதவீதம் மக்கள் இறந்தனர்.

13) வரையறு.

அ) மக்கள்தொகை வளர்ச்சி

ஆ) மக்கள்தொகை கணக்கெடுப்பு

இ) வளம் குன்றா வளர்ச்சி

**பதில் :** **அ) மக்கள் தொகை வளர்ச்சி:**

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பையே மக்கள் தொகை வளர்ச்சி என்கிறோம்.

**ஆ) மக்கள் தொகைக் கணக்கெடுப்பு:**

1. ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் அரசாங்கம் மக்கள் தொகை பற்றி கணக்கெடுப்பு நடத்தி தகவல்களைச் சேகரிக்கின்றது.

2. இக்கணக்கெடுப்பு மக்களின் வயது, பாலினம், கல்வியறிவு விகிதம் மற்றும் தொழில் போன்ற விவரங்களைப் பதிவு செய்கிறது.

3. ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரையின்படி ஒவ்வொரு 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

4. உலகின் முதல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு கி.மு (பொ.ஆ.மு) 3800 ல் பாபிலோனில் நடந்தது.

**இ) வளம் குன்றா வளர்ச்சி:**

1. வளம் குன்றா வளர்ச்சி என்பது எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளுக்கான வள இருப்பை உறுதி செய்வதோடு நிகழ்காலத் தேவையையும் பூர்த்தி செய்து கொள்வதாகும்.

2. வளம் குன்றா வளர்ச்சியை அடைவதற்கு பொருளாதார வளர்ச்சி. சமுதாயக் கூறுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கியமான அடிப்படைக் காரணிகளை ஒன்றிணைப்பது அவசியமாகும்.

3. இக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. அதன்மூலம் தனிமனிதன் மற்றும் சமூகத்தின் வளர்ச்சியை உறுதி செய்யமுடியும்.

14) உனது பகுதியைப் பற்றி நீ பார்த்தறிந்த குடியிருப்பு வகைகளை பற்றி எழுதுக

**பதில் :** 1. செவ்வக வடிவக் குடியிருப்புகள் - சாலைப் பகுதிகளில்

2. நேர்க்கோட்டுக் குடியிருப்புகள் - சாலையோரங்களில்

3. அரைவட்ட வடிவக் குடியிருப்புகள் - குளத்தைச் சுற்றி

4. குறுக்கு வடிவக் குடியிருப்புகள் - மூன்று சாலை சந்திக்கும் இடம்

15) தமிழ்நாட்டின் ஐந்து மிக அதிக மக்களடர்த்தி கொண்ட மாவட்டங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.

**பதில் :** 1. சென்னை
2. சேலம்
3. வேலூர்
4. திருவள்ளூர்
5. காஞ்சிபுரம்

16) இடப்பெயர்வுக்கான தள்ளு காரணிகளில் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

**பதில் :** 1. குறைந்த வேலை வாய்ப்பு
2. குறைந்த மருத்துவ வசதி
3. இயற்கைப் பேரிடர்
4. முன்னேற்றமடையாத வாழ்க்கை நிலை
5. பாலைவனமாதல்

17) இடப்பெயர்வுக்கான ஈர்ப்புக் காரணிகளில் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

**பதில் :** 1. நல்ல வாழும் சூழல்
2. வளமான நிலப்பகுதி
3. பாதுகாப்பு
4. தூய்மையான சுற்றுச்சூழல்
5. சிறந்த வேலை வாய்ப்பு வசதிகள்

18) காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகள் யாவை?

**பதில் :** 1. வெள்ளம் மற்றும் வறட்சி
2. பாலைவனங்கள் விரிவடைதல்
3. நீர்வளம் குறைதல்
4. கடல் மட்டம் உயருதல்
5. மண் வளம் இழத்தல்
6. காற்று மாசடைதல்
7. உயிரினங்கள் அழிதல்
8. உலகம் வெப்பமயமாதல்
9. ஓசோன் படலத்திலுள்ள ஓசோன் செறிவு குறைதல்

19) காற்று மாசுறுதலால் மனிதர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் யாவை?

**பதில் :** கந்தக டை - ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்சைடு, கார்பன் - டை - ஆக்ஸைடு போன்றவைகள் சுவாசக் கோளாறுகள், மஞ்சள்காமாலை. கண் எரிச்சல், தொண்டை எரிச்சல். தலைவலி. புற்றுநோய் மற்றும் உயிரிழப்பு போன்றவைகளை ஏற்படுத்துகின்றன.

20) நீரைப் பாதுகாப்பதில் நமது பங்கு என்ன?

**பதில் :** 1. ஆறு மற்றும் ஆற்றங்கரைகளில் கழிவுப்பொருட்களைக் குவிக்காமல், தூய்மைப்படுத்துதல் வேண்டும்.
2. சமைத்த கொழுப்புப் பொருள்கள் மற்றும் எண்ணெய்ப் பொருட்களைச் சமையல்றைத் தொட்டியில் கொட்டக்கூடாது.
3. குளிப்பதற்கு நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.
4. குழாய்களில் நீர்க்கசிவு இல்லாமல் பராமரிக்க வேண்டும்.
5. கழிப்பறையில் குறைந்த அளவு நீர் வெளியேற்றும் வகையில் கழிவுக் கலன்களைப் பொருத்த வேண்டும்.
6. பல் துலக்கும் போதும், துணி துவைக்கும் பொழுதும் தோட்ட வேலை செய்யும் பொழுதும் தேவைப்படும் நேரங்களில் மட்டுமே குழாயைத் திறக்க வேண்டும்.

**<u>5 மதிப்பெண் வினாக்கள்</u>** 5 x 5 = 25

21) மக்கள்தொகை பரவலைப் பாதிக்கும் காரணிகள் யாவை?

**பதில் : மக்கள் தொகைப் பரவல்:**
புவியின் மேற்பரப்பில் மக்கள் எவ்வாறு பரவிக் காணப்படுகிறார்கள் என்பதைப் பற்றி குறிப்பிடுவதே மக்கள் தொகைப் பரவலாகும்.
உலகின் எல்லா இடங்களிலும் மக்கள் தொகை சீராகப் பரவிக் காணப்படுவதில்லை.
**காரணிகள்:**
1. இயற்கை காரணிகள்
2. வரலாற்றுக் காரணிகள்'
3. பொருளாதாரக் காரணிகள்

**இயற்கைக் காரணிகள்:**
மழை, மண், நிலத்தோற்றம், நீர், இயற்கைத் தாவரங்கள். கனிம வளங்களின் பரவல் மற்றும் ஆற்றல் வளங்களின் இருப்பு ஆகியன மக்கள் தொகைப் பரவலுக்கான இயற்கைக் காரணிகளாகும்.
**வரலாற்றுக் காரணிகள்:**
வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், ஆற்றங்கரை நாகரிகங்கள். போர் மற்றும் தொடர் ஆக்கிரமிப்புகள் ஆகியன மக்கள் தொகைப் பரவலுக்கான முக்கியமான வரலாற்றுக் காரணிகளாகும்.
**பொருளாதாரக் காரணிகள்:**
கல்விக் கூடங்கள். வேலை வாய்ப்புகள், உற்பத்தித் தொழிற்சாலைகள், ஆடம்பர வசதிகள். வியாபாரம், வணிகம் மற்றும் பிற வசதிகளும் ஓரிடத்தின் மக்கள் தொகைப் பரவலுக்கான பொருளாதாரக் காரணிகளாகும்.

22) கிராமக் குடியிருப்பு வகைகளைப் படத்துடன் விளக்குக.

**பதில் : கிராமக் குடியிருப்புகள்:**

முதன்மைத் தொழில்களான வேளாண்மை, வனத்தொழில், கனிமத் தொழில் மற்றும் மீன்பிடித்தல் போன்றவற்றை மேற்கொண்டிருக்கும் குடியிருப்புகள் கிராமக் குடியிருப்புகள் எனப்படுகிறது.

இவை நிலைத்த நிரந்தரக் குடியிருப்புகளாகும்.

இவைகளின் தனித்தன்மை அதைச் சுற்றியிருக்கும் பரந்த பசுமையும் மாசற்ற சுற்றுச் சூழலும் ஆகும்.

**கிராமக் குடியிருப்பு வகைகள்:**

1. செவ்வகவடிவக் குடியிருப்புகள்
2. நேர்கோட்டுக் குடியிருப்புகள்
3. வட்டவடிவ அல்லது அரைவட்ட வடிவ குடியிருப்புகள்
4. நட்சத்திர வடிவக் குடியிருப்புகள்
5. முக்கோண வடிவக் குடியிருப்புகள்
6. T வடிவ. Y வடிவ, சிலுவை வடிவ (அ) குறுக்கு வடிவ குடியிருப்புகள்
7. மூலக்கரு வடிவக் குடியிருப்புகள்

**1. செவ்வக வடிவக் குடியிருப்புகள்:**

சம வெளிப் பகுதிகளிலும் , பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் காணப்படும் குடியிருப்புகள் செவ்வக வடிவக் குடியிருப்புகளாகும்.

இங்குச் சாலைகள் செவ்வக வடிவில் காணப்படுவதோடு ஒன்றையொன்று செங்கோணங்களில் வெட்டிச் வெல்லும்.



**2. நேர்க்கோட்டு குடியிருப்புகள் :**

இவ்வகையான குடியிருப்புகள் சாலை, தொடர்வண்டிப்பாதை ,ஆற்றங்கரை மற்றும் அணைக்கட்டு ஓரங்களில் காணப்படுகின்றன.



**3. வட்ட வடிவ குடியிருப்பு அல்லது அரைவட்ட வடிவ குடியிருப்புகள் :**


இவ்வகையான குடியிருப்புகள் ஏரிகள் குளங்கள் மற்றும் கடற்கரை பகுதிகளைச் சுற்றி வட்டமாகவோ அல்லது அரைவட்டமாகவோ காணப்படுகின்றன .



**4. நட்சத்திர வகை குடியிருப்புகள்:**

நட்சத்திர வடிவ குடியிருப்புகள் கப்பியிடப்பட்ட அல்லது கப்பியிடப்படாத சாலை அமைப்புகளின் ஓரங்களில் காணப்படுகின்றன,

இவை நட்சத்திர வடிவத்தில் எல்லா திசைகளிலும் பரவிக் காணப்படும்.



**5. முக்கோண வடிவக் குடியிருப்புகள் :**

ஆறுகள் ஒன்றாக சேரும் இடங்களில் காணப்படும் குடியிருப்புகள் முக்கோண வடிவக் குடியிருப்புகளாகும்.



**6. T வடிவ Y வடிவ சிலுவை வடிவ குறுக்கு வடிவக் குடியிருப்புகள் :**

T வடிவ குடியிருப்புகள் மூன்று சாலைகள் சந்திக்கும் இடங்களில் வளர்ச்சியடையும்.


Y வடிவக் குடியிருப்புகள் இரண்டு சாலைகள் காணப்படுகிறது.

குறுக்கு வடிவக் குடியிருப்புகள் நான்கு சாலைகள் சந்திக்கும் இடங்களில் காணப்படுகின்றன.



**7. முலக்கரு வடிவக் குடியிருப்புகள் :**

இங்குச் சாலைகள் வட்ட வடிவமாகவும் ஒரு மையத்தில் முடிய கூடியதாகவும் இருக்கும்.
கிராமத்தின் குடியிருப்புகள் செல்வந்தரின் குடியிருப்பைச் சுற்றியோ ஆழ்ந்து மதூதி , கோவில் தேவாலயங்களைச் சுற்றியுள்ள அமைந்திருக்கும்.



23) வளம் குன்றா வளர்ச்சி பற்றி விவரி.

பதில் : **வளம் குன்றா வளர்ச்சி:**

1. வளம் குன்றா வளர்ச்சி என்பது எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளுக்கான வள இருப்பை உறுதி செய்வதோடு நிகழ்காலத் தேவையையும் பூர்த்தி செய்து கொள்வதாகும்.
2. புவியில் மனித இனம் மாசுறுதல், காலநிலை மாற்றம், ஏழ்மை. போர் மற்றும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படாத வளங்கள் போன்ற பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்கிறது.
3. ஆகவே மக்களுக்கு வளம் குன்றா வளர்ச்சி பற்றிய கல்வியை அளித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
4. வளம் குன்றா வளர்ச்சியை அடைவதற்குப் பொருளாதார வளர்ச்சி. சமுதாயக் கூறுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கியமான அடிப்படைக் காரணிகளை ஒன்றிணைப்பது அவசியமாகும்.
5. இந்தக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. அதன்மூலம் தனி மனிதன் மற்றும் சமூகத்தின் வளர்ச்சியை உறுதி செய்ய முடியம்.
6. உண்மையான வளம் குன்றா வளர்ச்சியை அடைய வேண்டுமென்றால் நாம் சமூக பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் காரணிகளுக்குச் சம அளவு முக்கியத்துவம் அளிப்பது அவசியமாகும்.
7. நமது புவியையும் அதன் வளங்களையும் நம் மக்களையும் பாதுகாத்து அவற்றை எதிர்காலச் சந்ததியினருக்கு வளம் குன்றா நிலையில் அளிக்க வேண்டும்.
8. வளங்களைப் பாதுகாத்தல் மூலமும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மூலமும் வளம் குன்றா நிலையை அடைய முடியும்.
9. எப்போது நாம் வளம் குன்றா வளர்ச்சி என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறோமோ அப்போதே அதன் உண்மை நிலையைப் புரிந்து கொண்டு சுற்றுச் சூழலைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததிகளுக்கு வழங்கக் கடமைப்பட்டுள்ளோம்.

24) காடுகளை எவ்வாறு பாதுகாக்க முடியும்?

பதில் : **காடுகளைப் பாதுகாத்தல்**

(i) மரம் வெட்டுதலை முறைப்படுத்துவதன் மூலம் காடுகளைப் பாதுகாக்க முடியும்.
(ii) தொடர் கண்காணிப்பு மூலமும் மனித நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் காட்டுத்தீ ஏற்படுவதைத் தவிர்த்து காடுகளைப் பாதுகாக்கலாம்.
(iii) வனவளங்களின் பயன்பாடு: நாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான சுவாசிக்கும் காற்று முதல் பயன்படுத்தும் மரக்கட்டைகள் வரை அனைத்திற்கும் காடுகளைச் சார்ந்திருக்கின்றோம்.
(iv) இவை தவிர விலங்குகளின் வாழ்விடமாகவும் மனிதர்களின் வாழ்வாதாரமாகவும் காடுகள் உள்ளன.
காடுகளிலிருந்து கிடைக்கும் பொருள்கள் நமது அன்றாட வாழ்விற்கு அவசியமாகும்.
இதனால் வன வளத்தை நாம் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.
(v) சமூகத்திற்கு வனப் பொருள்கள் மற்றும் அதன் பயன்களின் தேவை அதிகரித்துள்ளது. தேவையைப் பூர்த்தி செய்யும்போது காடுகளின் நலனையும் அதன் பன்முகத்தன்மையையும் பாதுகாக்க வேண்டியுள்ளது.

25) காற்று மாசுறுதல் குறித்து விளக்குக.

பதில் : மனிதனின் சில நடவடிக்கைகளாலும், இயற்கைச் செயல்பாடுகளாலும் உருவாகும் திடக்கழிவுகள் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட வாயுக்கள் அதிகரிப்பதாலும் காற்று மாசுறுகிறது.

**இயற்கையான மாசுகள்**

இயற்கை மாசுகளான எரிமலை வெடிப்பு, காற்று அரித்தல், மகரந்தத்தூள், ஆவியாகும் கரிம கலவைகள் மற்றும் கதிரியக்கத் தனிமங்கள் போன்றவற்றால் மாசுறுதல் ஏற்படுகிறது. ஆனால் இயற்கையால் மிகக் குறைந்த அளவே ஏற்படுகிறது.

**மனிதனால் உருவாக்கப்படும் மாசுகள்:**

வாகனப்புகை, தொழிற்சாலைக் கழிவுகள், அனல்மின் நிலையங்களிலிருந்து வெளியேறும் புகை சுத்திகரிப்பு நிலையங்களின் மாசுகள் போன்றவை மனிதனால் உருவாக்கப்படும் மாசுகளாகும். இவை சுற்றுச்சூழலை பெரிதும் பாதிக்கின்றன.

**மாசுபாடால் மனிதனுக்கு உண்டாகும் பாதிப்புகள் :**

மாசுபாடின் காரணமாக மனிதனுக்கு சுவாசக் கோளாறுகள், மஞ்சள் காமாலை, கண் எரிச்சல், தொண்டை எரிச்சல், தலைவலி, புற்று நோய் மற்றும் உயிரிழப்பு போன்றவை ஏற்படுகின்றன.